TNMD260001092021



# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

**SPECIAL COURT TO DEAL WITH THE CASES OF OFFENCES IN CONTRAVENTION OF THE PROVISIONS OF THE MINES AND MINERALS (D&R) ACT, 1957, MADURAI**

**************

| | | |
|---|---|---|
| Case No | : | Spl.C.C.No.55/2021 |
| Deposition of witness | : | LW 7/ PW 2 |
| Name | : | **திரு.ஜெயபால்** |
| Father's Name | : | செல்லம் |
| Village | : | ஐயர்பங்களா |
| Taluk | : | மதுரை வடக்கு வட்டம் |
| Calling | : | குறுவட்ட அளவர் (ஓய்வு) |
| Age | : | 67/2026 |
| **Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 10.08.2026** | | |

எதிரிகள் தரப்பில் கு.வி.மு.ச. பிரிவு 317 ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. அரசு தரப்பு வழக்கறிஞர் மற்றும் எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

சாட்சி தொடங்கிய நேரம் : 12.52 PM

**முதல் விசாரணை :**

நான் மதுரை மாவட்டம் , பேரையூர் வட்டத்தில் 2013 ம் ஆண்டு குறுவட்ட அளவராக பணிபுரிந்து தற்போது பணிநிறைவு செய்துவிட்டேன் . நான் பணிபுரிந்த காலத்தில் மதுரை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் உத்தரவின்படிநான் , கிராம

NANTHINI R JEGANATHAN

Digitally signed by NANTHINI R JEGANATHAN
Date: 2026.08.10 17:50:40 +0530

நிர்வாக அலுவலர், கிராம உதவியாளர், கனிமவள அலுவலர்கள் உடன் சென்று மேலூர் வட்டம், கீழவளவு கிராமத்தில் சர்வே எண் .318, 319 ல் அடுக்கி வைக்கப்பட்ட கற்களை அதன் உயரம் , அகலம் அளவுகளை குறிப்பெடுத்து கொண்டோம் . அந்த குறிப்பை மதுரை சர்க்யூட் ஹவுசில் தற்காலிகமாக இயங்கி வந்த அலுவலகத்தில்தட்டச்சு செய்து பட்டியல் தயார் செய்து அதனை சரிபார்த்து கையொப்பம் செய்து அங்கு உள்ள கனிமவள அதிகாரிகளிடம் அதனை சமர்பித்தோம். சர்வே எண்.318 க்கான பட்டியல் **Ex.P.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**குறுக்கு விசாரணை** :

நான் அளவீடு பணி செய்வதற்கு 10.05.2013, 13.05.2013 அளவீடு பணி செய்ததாக சொல்லும் கீழவளவு புல எண் .318 க்கு செல்வதற்கு முன்பாகவோ அல்லது அளவீடு பணி தொடங்குவதற்கு முன்பாகவோ அந்த புலத்தின் உரிமையாளருக்கு முன் அறிவிப்பு எதுவும் வழங்கினேனா என்றால் இல்லை . நான் கையெழுத்திட்ட Ex.P.3 ஆவணத்தின் கடைசி பக்கத்தில் காலம் 3, 4 ஆகியவை கையொப்பம் செய்யப்படாமலும், பெயர் எழுதப்படாமலும் உள்ளது என்றால் சரிதான் . அந்த 2 காலத்திலும் நான் கையொப்பம் செய்துள்ள 5 வது காலத்திலும் Designation என்பதில் பிர்கா சர்வேயர் டிடிஎஸ் என்று தான் தட்டச்சு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான் . Ex.P.3 ல் 10.05.2013 ம் தேதி எவ்வளவு கற்க ள் மற்றும் 13.05.2013 ம் தேதி எவ்வளவு கற்கள் அளவீடு பணி செய்தோம் என்று பிரித்துக்காட்டப்படவில்லை என்றால்

NANTHINI R JEGANATHAN

Digitally signed by NANTHINI R JEGANATHAN
Date: 2026.08.10 17:50:56 +0530

சரிதான். Ex.P.3 ல் குறிப்பிடப்பட்டுள்ள 2 தேதிகளிலும் என்னுடன் வந்த புவியியலாளர்கள் ஒரே நபர்கள் தான் என்றால் சரிதான் . Ex.P.3 ஆவணத்தில் team number என்ற காலத்தில் T17, T16, T2, T22, T10 ஆகிய குழுக்கள் இடம்பெற்றதாக தட்டச்சு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான் . Ex.P.3 ல் நாங்கள் எடுத்த குறிப்புகளோடு தட்டச்சு செய்யப்பட்ட ஆவணத்தை சரிபார்த்து கையொப்பம் செய்தோம் என்ற வாசகம் இடம்பெறவில்லை என்றால் சரிதான் . குறிப்பெடுத்ததாக சொல்லும் குறிப்புகள் தற்போது யாரிடம் உள்ளது என்று தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. தற்காலிகமாக இயங்கி வந்த அரசு சுற்றுலா மாளிகையில் வைத்து தயார் செய்யப்பட்ட Ex.P.3 ஆவணம் , அந்த அலுவலகத்தை நிரூபிக்கும் வகையில் Ex.P.3 ஆவணத்தில் வாசகம் இடம்பெறவில்லை என்றால் சரிதான். இந்த புல எண் அளவீடு பணி செய்வதற்கு Tamilnadu Survey and Boundries Act 1923 பிரிவு 7 மற்றும் 10 ஐ கடைபிடிக்காமல் அளவீடு பணி செய்தது செல்லதக்கதல்ல என்றால் சரியல்ல . கனிமவளச்சட்டம் 23 B மற்றும் 100 Cr.P.C. இரண்டையும் கடைபிடிக்காமல் அளவீடு பணி செய்ததாக சொல்லப்படுவது செல்லதக்கதல்ல என்றால் சரியல்ல . Ex.P.3 ல் காட்டப்பட்டுள்ள கற்கள் கிரானைட் கற்கள் , விற்பனைக்குகந்த கற்களா, விற்பனைக்கு ஆகாத கற்கள் என்று எனக்கு தரம் பிரிக் கதெரியாது என்றால் சரிதான். அங்கிருந்த கற்கள் அனைத்தும் விற்பனைக்கு ஒவ்வாத கழிவுக் கற்கள் என்றும், அதன் அருகில் அரசு உரிமம் பெற்ற குவாரியில் இருந்து எடுத்து

NANTHINI R JEGANATHAN

Digitally signed by NANTHINI R JEGANATHAN
Date: 2026.08.10 17:51:01 +0530

வைக்கப்பட்ட கழிவுக் கற்கள், அந்த குவாரி குத்தகை உரிமம் முடிந்தபின்பு அந்த பள்ளத்தை நிரப்புவதற்காக வைக்கப்பட்டிருந்தது என்றால் சரியல்ல . நான் சொன்னது போல் 10.05.2013, 13.05.2013 ம் தேதிகளில் நானோ, முதல் விசாரணையில் சொன்ன குழுக்களோ கீழவளவு புல எண் .318 க்குசெல்லவில்லை என்றாலும், அளவீடு பணி மேற்கொள்ளவில்லை என்றாலும் சரியல்ல . சென்னையில் உள்ள தலைமை அலுவலகமான புவியியல் மற்றும் சுரங்கத்துறையில் தயார் செய்து கொடுக்கப்பட்ட ஆவணத்தில் பின்னிட்டு கையொப்பம் மட்டும் செய்துவிட்டு பின்னிட்டு அரசு ஊழியர் என்ற நிலையில் அரசுக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல . Ex.P.3 க்கும் எதிரிகளுக்கும் யாதொரு சம்பந்தம் இல்லை என்றாலும் சரியல்ல.

சாட்சி முடிவடைந்த நேரம் : 01.08 PM

(ஒம்./-)******

சாட்சியால் திறந்த மன்றத்தில் சாட்சியமளிக்கப்பட்டு அதை தட்டெழுத்தாளருக்கு என்னால் சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் வாசித்து பார்க்கப்பட்டு/சாட்சிக்கு வாசித்துக் காண்பித்து, அதை சரியென்று ஒப்புக்கொண்டு சாட்சி கையெழுத்திட்டார்.

NANTHINI R JEGANATHAN

Digitally signed by NANTHINI R JEGANATHAN
Date: 2026.08.10 17:51:05 +0530

சிறப்பு மாவட்ட நீதிபதி,

கனிமங்கள் மற்றும் சுரங்கங்கள் தொடர்பான

குற்ற வழக்குகள் தனி சிறப்பு நீதிமன்றம்,

மதுரை.